தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 17, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 செப்டம்பர் 3, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.”

உணவுப் பொருள்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல் உறுதுணையாக உள்ளனர்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

சூரிய மின்சக்திப் பூங்கா

***29022—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் சூரிய மின்சக்திப் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 3

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதியில் சூரிய மின்சக்திப் பூங்கா அமைப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. தென்காசி தொகுதியில் சூரிய மின்சக்திப் பூங்கா அமைக்க தனியார் நிறுவனங்கள் முன்வந்தால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழக விதிமுறைகளின்படி தனியார் நிறுவனங்கள்மூலம் சூரிய மின்சக்திப் பூங்கா அமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்களின் சார்பாகவும், தென்காசி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மின் பற்றாக்குறையை நீக்கி மின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு கொள்கைகளை வகுத்து முனைப்போடு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் அனல் மின் உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சூரிய ஒளி மின் சக்தி உட்பட மற்றும் இயற்கை எரிவாயு போன்ற புதிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருவதன்மூலம் மின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

மின் உற்பத்திக்கு மாற்றுத் தீர்வான சூரிய ஒளி மின் உற்பத்தி ஒரு சிறந்த வழிமுறையாகும். தமிழகத்தின் மின் தேவையை சமாளிக்கும் வகையில் சூரிய ஒளி மின் சக்தி நிலையங்களை அமைத்து சூரிய ஒளி சக்திமூலம் ஒரு இலட்சம் தெரு விளக்குகளுக்குமேல் மின் வசதி வழங்கி, பசுமை வீடுகள் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்கு சூரிய ஒளி மின்

2015 செப்டம்பர் 3]

சக்தி வசதியை ஏற்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு சாதனை படைத்து வருகிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்மூலம் கடந்த 4 ஆண்டுகளாக தமிழகத்தில் 1,000 மெகா வாட் உற்பத்தி செய்யும் சூரிய ஒளி மின் உற்பத்திப் பூங்காக்களை பல்வேறு மாவட்டங்களில் அமைக்க நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், தென்காசி தொகுதியில் சுற்றுலாத் தலமான குற்றாலம் பகுதியில் சூரிய மின்சக்திப் பூங்காக்களை அரசு மூலமாகவோ அல்லது தனியார் முன்வரும்பட்சத்தில் அவர்கள் மூலமாகவோ அமைக்க அனுமதி வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பாகவும், தென்காசி தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமோ அல்லது அரசோ நேரடியாக மின் உற்பத்தி செய்வதில்லை. மாறாக, அது காற்றாலை மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி அல்லது உயிரி எரிவாயு மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி அல்லது இணை மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி அல்லது சூரிய ஒளி மின் சக்தியின் மூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரமாக இருந்தாலும் சரி அல்லது மரபுசாரா எரிசக்தி என்று சொல்வார்களே, அதனை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மூலமாக, தனியார் யார் முன்வருகிறார்களோ அவர்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எல்லா உதவிகளையும் செய்து கொள்முதல் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. அந்த வகையிலே யார் முன்வந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முன்வந்தால்கூட, நீங்களேகூட அந்தத் தொகுதியில் சூரிய ஒளி மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கு முன்வந்தால், விதிமுறைகளுக்கு உட்பட்டு நீங்கள் உற்பத்தி செய்தால், அதைக் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்றால், வேறு யாராவது, உங்களுக்குத் தெரிந்த தொழில் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தி, உங்கள் பகுதிக்கு அழைத்துச்

சென்று, அந்தப் பகுதியிலே சூரிய மின் சக்திப் பூங்கா அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-05

உறுதியாக, சூரிய மின் சக்திப் பூங்காவை அந்தப் பகுதியிலே அமைக்க வேண்டும் என்று சொன்னால் அதற்குரிய நிலங்கள் தாராளமாகக் கிடைக்க வேண்டும். அப்படி நிலங்கள் தாராளமாகக் கிடைக்கும்பட்சத்தில் பல தனியார்களே முன்வரக் கூடும். ஆகவே, அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறபொழுது அந்தப் பகுதியிலே தனியார் மூலமாக மின் உற்பத்தி செய்கின்ற அந்த உற்பத்தியாளர்களுக்கு எல்லாவகைகளிலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் உதவி புரியும், துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.

அம்மாவுக்கு நிகர் அம்மாதான் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி, வட்டகாட்டுப்புதூரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு மின் கம்பிகள் இடையூறாக இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே 10¼ மணிக்குக் கேள்வி நேரத்திலே கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வார காலத்திற்குள் அதை முடித்துக்கொடுக்கிறேன் என்று அறிவித்தார்கள். கேள்வி கேட்டு முடித்த அரை மணி நேரத்திற்குள் பணி துவங்கப்பட்டு மாலை 5-00 மணிக்குள் பணிகள் முடித்துக் கொடுக்கப்பட்டதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.